நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற,தலையாகிய கிறிஸ்துஇயேசுவோடு– கூட, அவரது சரீரத்தின் எல்லா அங்கங்களும் உள்ளனர். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள்பரிசுத்தரும் பாக்கியவான்களுமாவர். இந்த மகிமையான சரீரம் உயிர்த்தெழுதல் அடைந்தபிறகு, அவருடையவர்கள் எல்லாரும் அவரது பிரசன்னக்காலத்தில் (கிரேக்க மொழியில் – பரோசியா– பிரசன்னம், வருகைஅல்ல). ஜீவிக்கின்ற அவருடையவர்கள் அனைவரும் மகிமையடைவர். அவர் ஆளுகைசெய்யும் ஆயிரவருடம் முழுவதும் அவரது பிரசன்னத்தின் காலமாக இருக்கும். அக்காலப்பகுதியில், பிரேதக்குழிகளிலுள்ள (நல்லோர் மற்றும் தீயோர், நீதிமான்கள் மற்றும் அநீதர்) அனைவரும் அவரது சத்தம் கேட்டு, எழுந்துவருவார்கள். நன்மைசெய்தோர் ஜீவன்பெற உயிர்த்தெழுந்தும், தீமைசெய்தோர் நியாயத்தீர்ப்படைய உயிர்த்தெழுந்தும் வருவர் – கிரேக்கமொழியில் – கிரைசிஸ் – நியாயத்தீர்ப்பு – நித்தியதண்டனையல்ல(யோவான் 5:28–29). முந்தைய வகுப்பார் முழு உயிர்த்தெழுதலை – மனித பரிபூரணத்தை வெகுமதியாக உடனடியாக பெற்றுக்கொள்வர். பிந்தைய வகுப்பாரோ நியாயத்தீர்ப்படைய அல்லது நித்தியஜீவன் பெறும் பரீட்சைக்கு விழித்தெழுப்பப்படுவார்கள். அது அவர்கள் அனுகூலமடையும்படிக்கு சிறப்புரிமையாக இருந்து, அவரது ஒழுக்கங்களையும் கட்டுப்பாடுகளையும் கற்றுக்கொள்ள தங்களையே முழுமையாக அர்ப்பணித்து, கிறிஸ்துவுடையவர்களாக மாற வழிவகுக்கும். அவ்வாறு தங்களை அர்ப்பணிக்காதவர்களது பரீட்சை, 100 வருட தவணைக் காலத்தோடு முடிவடைந்து, இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள், அதிலிருந்து மீள வேறுவழியில்லை(ஏசாயா 65:20). மரணத்திலிருந்து விழித்தெழுப்பப்பட்ட அனுபவத்தை எல்லோரும் அடைந்திருந்தாலும், கிறிஸ்துவையல்லாமல் ஒருவரும் பிழைத்திருக்கவோ, முழுமையாக உயிர்த்தெழவோ முடியாது. விழித்தெழுப்பப்படுவதே உயிர்த்தெழுதல் வழிமுறையின் முதல்படியாகும். மேலும், அவர்கள் முழுமையான உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்பதை நிரூபிக்கும். முழுமையான உயிர்த்தெழுதல் என்பது உண்மையான பரிபூரணம் மற்றும் நித்திய ஜீவன் ஆகும்.

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" – 1யோவா5:12

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" – யோவா 3:36.

கிறிஸ்து அடைந்த வெற்றியை 24 மற்றும் 25ம் வசனங்கள் நிச்சயப்படுத்துகிறது. அந்த வெற்றி எதை உள்ளடக்கினதெனில், எதிர்க்கும் ஒவ்வொரு வல்லமை மற்றும் அதிகாரத்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்தினதையும், அவரது தீர்மானத்தின்படி எல்லா எதிரிகளையும் அழிக்கிறார். அந்த எதிரிகள் தீமையானவைகளாய் இருந்தாலும், துரைத்தனங்கள் அதிகாரங்கள் வல்லமைகள் மற்றும் தனிப்பட்ட நபர்களாயிருந்தாலும் தம் பாதத்துக்கு கீழ்ப்படுத்துகிறார். மாபெரும் உபத்திரவக்காலத்தில், முதலாவது, எல்லாத் தீமைநிலைமைகளையும் நீக்குகிறார்(தானி 12:1). மேலும் அத்தீமை நிலையை நீக்கினதற்கு பதிலாக, நீதியின் நிலைமை மற்றும் சமாதானம் ஏற்படப் பண்ணுகிறார். உலகத்திற்கு தம் வெளிச்சம் மற்றும் சத்தியத்தைக்கொண்டு உலகத்தை நிரப்பி, தீமையின் நோக்கங்களையும் கொள்கைகளையும் நீக்கி, மனப்பூர்வமாய் கீழ்ப்படிகிற அனைவரது இருதயங்களையும் முறையான ஆவியால் புதுப்பிக்கப்படச் செய்கிறார். தம் சொந்த பரலோக வல்லமையை இயக்கி, எதிர்க்கிற ஒவ்வொரு வல்லமையையும் முழுமையாக ஜெயங்கொள்வதோடு, முழுமையாகவும் இறுதியாகவும் முடிவுக்குக் கொண்டு வருகிறார். எதிர்க்கிற ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் கீழ்ப்படுத்தி, இரண்டாம் மரணத்தில் அழிக்கிறார். அதிலிருந்து அவர்கள் மீண்டுவர வழியில்லை.

"எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் அவர் ஆளுகைசெய்ய வேண்டியது".

அந்த ஆளுகையின் காலம் ஆயிரம் ஆண்டுகளாக வரம்பு விதிக்கப்பட்டுள்ளது(வெளி20:6–10). அக்காலம் முடிவடையும்போது எதிர்க்கும் தனிப்பட்ட ஒவ்வொருவரும், அவர்களை வஞ்சிக்கும்படி வழிநடத்திச்சென்ற சாத்தானும், அக்கினிக்கடலில் அழிக்கப்படுவர். இதுவே இரண்டாம் மரணம்(வெளி 20:7–15). கடைசியாக அழிக்கப்படும் சத்துரு மரணம். இது, எதிர்ப்பாளர்கள் அழிக்கப்பட்ட இரண்டாம் மரணமல்ல, இதற்குமாறாக, ஆதாமுக்குள்ளான மரணம். இங்கு உபயோகிக்கப்பட்ட மொழிநடை, முரண்பாட்டை வருவிக்கக்கூடும். இரண்டாம் மரணத்தை அழிக்கஅல்ல, ஆதாமுக்குள்ளான மரணத்தை அழிக்கவும், அம்மரணத்தின் பிடியில் அகப்பட்டிருந்தவர்களை விடுவிக்கவுமே இயேசு வந்தார். இவ்வாறு எல்லோரையும் விடுவிக்க ஆயிரவருட அரசாட்சி முழுவதும் தேவைப்படும். நமது திறவுவசனத்தின் வார்த்தைகளை மீண்டும் நினைவுகூர்வோமாக – நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்குஸ்தோத்திரம்.

---

**R 5885**

## கிறிஸ்துவோடு நுகத்தடிக்குட்பட்டோர்

## YOKE-FELLOWS WITH CHRIST

திறவுகோல் வசனம் : "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" – மத்தேயு 11:29,30


நம் கர்த்தர் இங்கு யூதர்களுக்கே இவ்வார்த்தைகளை கொடுத்தார். அவர் புறஜாதியாருக்கு போதிக்கவில்லை. ஏனெனில் அவர்களுக்கு தயவளிக்கும் காலம் இன்னும் அப்போது வந்திருக்கவில்லை. ஆகவே புறஜாதியாருக்கென்று அவர் அனுப்பப்படவில்லை.

காணாமற்போன ஆடாகிய இஸ்ரயேல் வீட்டாரை இரட்சிக்கவே அனுப்பப்பட்டேன் என்று அறிவித்தார். இஸ்ரயேலர் ரோம தேசத்தின் நுகத்தடிக்கு கீழ்ப்பட்டிருந்தனர். ஆனால் இந்த நுகத்தடியை நம் கர்த்தர் குறிப்பிட்டதாக நாம் எண்ணுகிறதில்லை. அவர்கள் மதத்தின்

நுகத்தடியாகிய நியாயப்பிரமாண நுகத்தடியின் கீழிருந்தனர். நுகத்தடி என்பது அடிமைத்தன நிலைமையை குறிக்கிறது. நுகத்தடியை தாங்குபவன் ஒரு ஊழியக்காரன். உதாரணமாக, காளைக்கு ஒரு நுகத்தடி உண்டு, அதைஅதன்மேல் சுமத்துவர். அவைகள் நுகத்தடியை சுமக்கவேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக, நுகத்தடியின் உதவிகொண்டு அதன்மேல் வைக்கவேண்டிய பாரங்களை சுமப்பதற்காகவே நுகம் வைக்கப்படுகிறது.இப்படியாக நுகத்தடி ஊழியத்தின் அடையாளமாக, பாரஞ்சுமத்தலை குறிப்பிடுகிறது. அவ்வாறே இஸ்ரயேலரிடமும் காணப்பட்டது; நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் எல்லா கடமைகளும் பொறுப்புக்களும் அவர்களால் சுமக்க வேண்டியதாயிருந்து. அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குட்பட்டு, தேவனுடைய ஊழியர்களாவதற்கு சம்மதித்திருந்தனர். ஆனால் தாங்கள் பாவத்தினிமித்தமாக பலவீனராக, சீரற்ற நிலைமையிலிருப்பதையும், இதனால் நியாயப்பிரமாணத்தின் சுமைகளை தங்களால் சுமக்கமுடியாது என்றும் கண்டுகொண்டனர். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் பாரத்தை ஒரு யூதனாலும் சுமக்கமுடியாதிருந்தது. ஒருவனும் நீதிமானில்லை, ஒருவனாகிலும் இல்லை. தேவனது பரிபூரண பிரமாணத்தின் கடமைகளை ஒருவனாகிலும் நிறைவேற்ற முடியவில்லை.

நம் கர்த்தர் நியாயப்பிரமாணத்துக்கு அப்பாற்பட்டு எக்காரியத்தையும் செய்ய வந்திருக்கவில்லை. அதற்கு மாறாக, நியாயப்பிரமாணத்தை விசாலமாக்கி, அதை கனப்படுத்தினார். அவர்களது அபூரணத்தினிமித்தமாக ஒரு மனிதனாலும் கடைப்பிடிக்கமுடியாமற்போனாலும், அதன் எதிர்பார்ப்புக்கள் புத்தியறிவில்லாததோ, அநீதியானதோ அல்ல என்று அவர் எண்பித்தார். நியாயப்பிரமாணத்தை தன்னில் பரிபூரணமாக கடைப்பிடித்ததன்மூலம், கீழ்ப்படிதலின் மூலம் ஒரு பரிபூரண மனிதனால் செய்யக்கூடாத காரியம் எதுவுமில்லை என்று நம் கர்த்தர் நிரூபித்தார். ஆனால் இது பரிபூரண மனிதனது முழு அளவிலான ஆற்றலினாலேயே கூடும். தாங்குவதற்கு மேலான சுமையை அவர் சுமக்கும்படி நியாயப்பிரமாணம் அவரை சோதிக்கவில்லை. அதன் ஒவ்வொரு தேவையையும் சந்திக்கும்படி அவர் தகுதிபெற்றிருந்தார், அவ்வாறே செய்தும் காட்டினார்.

ஆனால் தற்பொழுது, தம் சீஷர்களை வேறொரு நுகத்தடியின் கீழ் வரும்படி அழைக்கின்றார். அவருக்கு அடிமைகளாகும்படியான நுகத்தடியே அது. மகிழ்ச்சியின் நற்காரியங்களை சுவிசேஷமாக கொண்ட ஒரு புதிய நற்செய்தியை அவர் பெற்றிருந்தார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கடமைப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுதலை இது பேசுகிறது. அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாமல், அவர்களை கிறிஸ்துவுக்குள் நடத்துகிற உபாத்தியராக இருக்க வடிவமைக்கப்பட்டது. தற்போது திறக்கப்பட்ட இந்த அற்புதமான புதிய ஏற்பாட்டில் எப்படி அவர்கள் பங்குபெறமுடியும் என்று அவர்களுக்கு அவர் கூறினார். இந்த ஏற்பாட்டுக்கு அவரே தலையாக இருக்கிறார். இந்த ஏற்பாடு ஒட்டுமொத்தமாக பிதாவினுடையது. ஆனால் அவரது குமாரன் அதற்கு விசேஷித்த பிரதிநிதியாய் இருக்கிறார். அவரது சீஷர்கள் இயேசுவில் விசுவாசம்வைத்து தங்கள் மேசியாவாக ஏற்றுக்கொண்டு, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மரித்ததன்மூலம் பங்குபெற்று, அவரோடு ஐக்கியப்படுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் கிறிஸ்துமூலமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டு, தேவபுத்திரராகின்றனர்.




**புதியசிருஷ்டி நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்**

நீதியின் பிரமாணத்தை கடைப்பிடிப்பதன் வழிமுறைப்படி, மேசியாவோடு பங்காளிகளாக இணைக்கப்படுவர். இந்த புதியவகையான நுகத்தடியின்மூலம், இந்த புதிய நிலைமைகளின்படியும் தேவனுடைய பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமாயிற்று. பழையசிருஷ்டியின்மேல் புதிய நுகம் சுமத்தப்படவில்லை. பழைய சிருஷ்டி நியாயப்பிரமாணத்தின் தேவைகளை சந்திக்கவோ, கடைப்பிடிக்கவோ முடியாது என்று ஏற்கனவே நிரூபித்தாகிவிட்டது. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின்படி, புதுசிருஷ்டியாக வேண்டுமானால், அவர்கள் மரிக்கவேண்டும். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மட்டுமல்ல, பூமிக்குரிய ஆர்வங்கள், நம்பிக்கைகள், செழுமைகள் எல்லாவற்றிற்கும் மரிக்கவேண்டும். அப்படி மரித்தவர்களைப்பற்றி, “மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுவதாக”(ரோமர் 8:4)அப்போஸ்தலர் கூறுகிறார்.

நாம் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதோடு,அதற்கும் மேலாகவே செய்கிறோம். சகோதரர்க்காக நாம் நமது ஜீவியத்தையே அர்ப்பணிக்கின்றோம். இது நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்ப்பதைக்காட்டிலும் மேலானது. ஆனால் புதுசிருஷ்டியே இதை செய்கிறது. தேவனுடைய நிலைப்பாட்டின்படி, பழையசிருஷ்டி மரித்துவிட்டது. பழைய சரீரத்தின் மூலமாக புதியசிருஷ்டி இயங்கவேண்டும். கிறிஸ்துவின் நீதியின் ஆடையால், அபூரணங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. இப்போதிலிருந்து புதியசிருஷ்டி தெய்வீகப்பார்வையின்படி நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறது. இந்த புதியசிருஷ்டி, கர்த்தரிடத்தில் உண்மையாய் நிலைத்திருந்து, கிறிஸ்துவின் இரத்தத்தின் தகுதி தொடர்ச்சியாக

அருளப்படுவதனால், அதன் அபூரண சரீரம் கழுவப்பட்டுக்கொண்டே வருகிறது.

**இஸ்ரயேலின்மேலிருந்த நியாயப்பிரமாணத்தின் பாரமான நுகம்:** யூதர்களின் கவனத்துக்கு கொண்டுவரும் நோக்கத்திற்காகவே குருவாகிய இயேசு இந்த விஷயத்தை நினைப்பூட்டுகிறார். நியாயப்பிரமாணத்தின் சுமைகள் தங்களை நீண்டகாலமாக வேதனைக்குள்ளாக்கி வருவதை அவர்கள் ஓரளவு அறிந்திருந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளுக்கு பூரணமாகக் கீழ்ப்படிந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்தியஜீவனை ஆதாயப்படுத்த முடியாத நிலையிலுள்ளதை உணர்ந்திருந்தார்கள். அவர்கள் 1600 ஆண்டுகளாக நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிசெய்து வந்திருந்தும், தோல்வியையே தழுவினார்கள். தேவன் மேசியாவை தங்களுக்கென வாக்களித்திருந்ததை அவர்கள் நினைவில் நிறுத்தியிருந்தனர். மேலும், ஏதாவது ஒரு வழியில் புதிய ஏற்பாட்டை அவர் ஏற்படுத்துவார் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் எப்படி எப்பொழுது என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. தேவன் தங்களது தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைத்திருந்தபடி, அவர்களது மாம்சத்தில் கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அளிப்பார் என்று நம்பியிருந்தனர். ஆகவே விசுவாசிகள் இந்த மேசியாவையும், அவர்மூலமாக வாக்களிக்கப்பட்டிருந்த எல்லாவற்றிற்காகவும் தவித்து, விழித்து காத்திருந்தனர். தேவபக்தியுள்ள யூதர்கள் இவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காக இன்னும் காத்திருக்கின்றனர். ஆனால் இயேசு தம் முதலாம் வருகையில் வந்திருந்து, அவர் துவங்கின ஊழியத்தைக்குறித்து முன்பே தெளிவாக அவர்களால் புரிந்துகொள்ளமுடியாதிருந்தது. தீர்க்கதரிசிகள் மூலமாக வாக்களிக்கப்பட்டிருந்த புதிய உடன்படிக்கையை அப்பொழுது அவர் கொண்டுவரவில்லை.(எரேமியா**31:31–34; 32:38–41**; எசேக்கி **11:19; 36:25–30**). அப்பொழுது அவர்களது கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை தரவில்லை. இது வருங்காலத்தில் நடக்கவேண்டிய பணியாயிருந்தது. இது ராஜ்யத்தின் ஊழியம், பூமி முழுவதும் தேவராஜ்யம் வல்லமையிலும் மகிமையிலும் ஸ்தாபிக்கப்படும்போது இது நிறைவேறும்.

**புதிய சிருஷ்டி துவக்கம் :–**

ஆனால் தற்போது, எல்லாவற்றிற்கும் முதலாவதாக, ஒரு வேறொரு நோக்கத்திற்காக மேசியா வந்திருந்து ஆயத்தப்பணிகளை செய்வார். ஒரு புதிய காரியத்தை அவர் ஸ்தாபித்தார், ஒரு புதிய சிருஷ்டியை அவர் துவக்கினார். முறையான இருதயநோக்கத்தைப்பெற்றிருந்த யூதர்கள் அநேகருக்கு அவரோடுகூட சேரும்படியான அழைப்பு விடுத்தார். வருங்காலத்தில் ஸ்தாபிக்கவிருக்கிற புதிய உடன்படிக்கையை எதிர்நோக்கி காத்திராமல், இவ்விஷயத்தில் அவரோடுகூட இணையும் பங்கைப்பெற்று, தேவபுத்திரராகும்படி அழைத்தார். என் நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று இயேசு கூறினார். உண்மையாய் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிப்போரிடையே அவரது இந்தசெய்தி நல்மதிப்பைப் பெற்றது;

“வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்”–மத் **11:28.**

இங்கு ஒரு புதிய ஆலோசனை கொடுக்கப்பட்டது. அவர் பேசின உருவகபாஷையை அவர்கள் முழுமையாகப் புரிந்துகொண்டிருந்தாலும், அவர்களுக்கு இது மிகவும் விநோதமாய்த் தோற்றமளித்திருக்கும்.

சுபாவத்தின்படி புறஜாதியாராக நாம் இருந்தாலும், ஒருபோதும் யூதரது நியாயப்பிரமாண நுகத்தின்கீழ் இருக்கவில்லை. ஆயினும், வேறொரு வழியில் நமக்கு மாபெரும் சுமை நம்மால் தாங்கிக்கொள்ளமுடியாததாய் – பாவம் மற்றும் மரண சுமைகள் இருக்கின்றன. முதலாவதாக, ஆதாம் இந்த பாவ சுமையைத் தாங்கினார். நாம் அனைவரும் பாவத்தின் பாரத்தை உணர்கிறோம், சுமக்கிறோம். அதன் எல்லா தீமையின் விளைவுகளையும் சேர்த்து சுமக்கிறோம். ஆகவே குருவின் நம்பிக்கையும் ஆறுதலுமான வார்த்தைகள் நமக்கு மகிழ்ச்சியையும், புத்துணர்வையும் நம் இருதயத்துக்கு தருகின்றன. அவரது நுகத்தை தரித்தவர்களாக, அவருக்குள் அருளப்பட்ட இந்த இளைப்பாறுதலை நாம் கண்டடைந்து, நம் உண்மை தோழனாகிய அவருக்குள் இளைப்பாறுகிறோம்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்கள் அனைவரும், பாவத்தின் கசப்புணர்வையும், அதன் சுபாவத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். இவர்கள் அதன்போக்கை அறிந்து, பயப்பட்டு, அதற்கெதிராக போராடுகிறார்கள். இப்படிப்பட்ட அனைவரையும் தம்மிடத்தில் வரும்படி நம் குரு அழைக்கிறார். அவரது நுகத்தை தங்கள்மேல் சுமத்திக்கொள்ளவும் அவரைக்குறித்து கற்றுக்கொள்ளவும் அழைக்கப்படுகிறார்கள். அவரது நுகம் இலகுவானது என்றால்,அதை சுமக்க எளிதானது, இதை தவறாகவோ, குறைவாகவோ மதிப்பிடமுடியாது.

**பூரணமானதும், இணக்கமானதுமான நுகம் :–**

நுகம் பூட்டப்பட்ட காளையை நாம் பார்த்திருப்போம். அதன் கழுத்தின்மீது பெரிய மரத்தினாலான நுகம் சுமத்தப்பட்டு, தோல்கள் தற்றும் தசைகள்மேல் கடினஅழுத்தம் கொடுப்பதை நாம் பார்த்திருப்போம். அந்த நுகம் சரியாக மிருகத்தின் கழுத்தின்மேல் பொருந்தவில்லையெனில், உராய்வினால் வேதனையை ஏற்படுத்தும். ஆனால் முறையாகப் பொருத்தப்பட்ட நுகம் சௌகரியமாக இருப்பதோடு, பாரத்தை எளிதாக சுமந்துசெல்லமுடியும். தமது நுகம் இலகுவாயும், சவுகரியமாயும், மகிழ்ச்சியை அனுபவிப்பதாயும் இருக்கும் என்று நம் கர்த்தர் அறிவித்தார். அவரது நுகம் சரியாகச் சொல்வோமேயானால், வளைந்துகொடுக்குமளவில் இருக்கும். அதை அணிந்துகொள்ளும் வேறுபட்ட தனித்த நபர்களது மாறுபாடுள்ள நிலைமைகளை அது சந்திக்கிறது. பெரியஅளவில் உள்ளோர்க்கு பெரிதாகவும், சிறிய அளவிலுள்ளோர்க்கு சிறிதாகவும் இருக்கும். நடுநிலையிலுள்ளோர்க்கு நடுநிலை அளவாயும் இருக்கும். இந்த நுகத்தில் மிக மேலான, மிக உன்னதமான மற்றும் பெரும்பாலான தாலந்துகளை உடையோர் கர்த்தரோடு நுகத்திற்குட்படலாம் அல்லது மிகவும் அற்பராயிருப்போரும் இதில் உட்படலாம். சுமப்பதற்கு நம்மில் ஆற்றலில் குறைவுபடுவோமானால், அவை எல்லாவற்றையும் தாங்க கர்த்தரால் கூடும். ஒருவரால் சுமக்கமுடியும் இந்த நுகத்தைப்பேல் வேறு எந்த நுகமும் இல்லை. மெய்யாகவே

இந்த நுகத்தை சுமப்பதற்கு பரிபூரணம் அவசியமாயிருக்கிறது. நாமோ பலவீனரும் அபூரணருமாய் இருக்கிறோம். நம்மிடத்தில் பத்தில் ஒரு பங்கு பரிபூரணம்இருந்து, மீதி பத்தில் ஒன்பது பாகம்அபூரணம் இருக்குமேயானால், நம்மிடம் குறைவாயிருக்கிற பத்தில் ஒன்பது பாகத்தை நம் கர்த்தர் சுமப்பார். நம்மிடத்தில் பாதி பூரணம், பாதி அபூரணம் இருக்குமேயானால், அந்த பாதி அபூரணத்தை அவர் சுமந்துகொள்வார். அந்த வகையில் சுவிசேஷயுகத்தில் மாபெரும் வாய்ப்பு அருளப்பட்டு, பலவீனர் அதை சுமக்கவும், பலமுள்ளவர்க்கு தேவையானதை பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடுகள் உள்ளது.

நம் கர்த்தராகிய இயேசு அப்போஸ்தலர் பவுலுக்கு இந்த நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார்;

“பலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும்” **(2கொரி12:9)**. நாம் அவரை நேசிப்பதால் சகலமும் நன்மைக்கேதுவாகவே நமக்கு நடக்கிறது. ஏனெனில் நாம் அவரது நுகத்தை எடுத்திருக்கிறோம், அவருடன் நுகத்தடியை சுமந்துவருகிறோம். அவரோடு துன்பப்படும் பாக்கியம் கிடைத்ததற்காக சந்தோஷப்படுகிறோம். மாம்சம் துன்பப்படக்கூடும், ஆனால் ஆவியோ சந்தோஷப்படுகிறது. நமது பெலனுக்கு மேலாக நாம் சோதிக்கப்படமாட்டோம். அவரது சுமை இலகுவாயிருக்கிறது. அவரது ஏற்பாட்டின்படி, அவரால் செய்யக்கூடுமளவு, வேறு ஒருவரும் செய்ய அவசியமிருக்காது. நாம் முறையான ஆவியைப் பெற்றிருந்தோமானால் நம்மால் கூடுமான அனைத்தையும் செய்வதில் மகிழ்ந்திருப்போம். தன் ஆற்றலைக்கொண்டு, தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ய மனதில்லாதவன், கர்த்தரால் உண்மையுள்ளவனாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டான். துப்புரவு மற்றும் உண்மையில் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நம் குருவின் சுமை இலகுவாக இருக்கும். இவ்வாறு ஏற்றுக்கொள்பவர் மட்டுமே அவரோடுகூட நுகத்தடியை சுமக்கமுடியும்.

———————————————————

**R 5886**

# சிறு நரிகள்
# The Little foxes

**திறவு வசனம் : திராட்சத் தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே**

நரிகளை, குறிப்பாக சிறுநரிகளை பிடியுங்கள் என்று மேற்கண்ட வசனம் கூறுகிறது. நரி மிகவும் தந்திரமுள்ளதாக அறியப்பட்டாலும், இது எளிதில் பழகக்கூடிய, அமைதலுள்ள சிறு மிருகமாக உள்ளது. மூர்க்கத்தனமும் தீயகுணமும் வெளிப்படுமளவு தகுதிபெற்றதல்ல, மாறாக, அதிக தீங்கு ஏற்படுத்தக் காரணமாயுள்ளது. கேடுவிளைவிக்காதவாறு தோற்றமளிக்கும் இதன் முகப்பொலிவு, அதிக அபாயத்தை உண்டுபண்ணும். சிறு நரியாகிய இது, நாய் குடும்பத்தில் சிறியதான, எல்லாவற்றையும்போலவே அதன் குணாதிசயம் மிக அழிவை ஏற்படுத்தும். இதிலும் குறிப்பாக பிறருக்கு தீங்கு விளைவிப்பதில் நரி மிகவும் தந்திரமுள்ளதும் ஏமாற்றும் குணமும் கொண்டது. ஆனாலும் இதன் தீயநோக்கங்கள் குறித்த சந்தேகம் எழும்புவது குறைவாகவே இருக்கும். இது எளிமையின் தன்மையை விநோதமாய்க் கொண்டது. கபடற்றதாய் வெளித்தோற்றத்துக்கு காணப்படுவதால் பலரை வஞ்சிக்கும்.



திறவுவசனத்தில் நமது விழுந்துபோன சுபாவத்தின் ஒழுக்கக்கேடுகளுக்கு அடையாளக்காட்சியாக சாலமோன் ராஜா விளக்குவதாக தோன்றுகிறது. இந்த ஒழுக்கக்கேடுகள் உச்சகட்டத்தை குறிப்பதாகவோ, முழுமையை குறிப்பதாகவோ பேசவில்லை. ஆனால் சில ஒழுக்கக்கேடுகள் மிகவும் தீங்கு ஏற்படுத்துபவை. அவைகள் விசேஷித்த வஞ்சனைக்குள்ளாக்கி, நமது கவனத்தை தந்திரமாக திசைதிருப்பிவிடும். இதன்காரணமாக, அதிக அக்கறையும், நிலையான விழிப்புணர்வும் தேவை. இந்த வார்த்தைகள், மணவாட்டிக்கு மணவாளன் கூறும் மொழிநடையாகத் தோன்றுகிறது. “சிறு நரிகள்” என்று அவர் வலியுறுத்தி உரைத்திருப்பதன்மூலம், அவைகள் மாபெரும் அழிவை ஏற்படுத்தக்கூடியவை என்று அறிவுறுத்துகிறது. சிறுநரி என்ற இந்த பதத்தை, பாவத்துக்கு நாம் பொருத்திப் பார்க்கும்பொழுது, உண்மையில் சிறிய பாவங்கள், வெளிப்படையான பாவங்களைக் காட்டிலும் மிகவும் அபாயகரமானவை. ஏனெனில் மாபெரும் பாவங்களுக்கு எதிராக காத்துக்கொள்வதிலேயே கவனமாயிருந்து, சிறு பாவங்களை அலட்சியப்படுத்துவோம். ஒவ்வொருவரும் இயல்பாகவே சிங்கம், கரடி, பாம்புகளைக் குறித்து கவனமாய் இருப்போம். ஆனால் சிறு நரிகள் கவர்ந்திழுக்கும் தோற்றம் உடையவைகளாதலாலும், கபடற்ற குணமுடையவைகளாக தோன்றுவதாலும், அவைகளிடத்தில் கசப்பான அனுபவம் அடைந்திருந்தால் ஒழிய, அவைகளைக் குறித்த பயம் இருக்காது அல்லது ஓரளவே பயமிருக்கும். ஆனால் இந்த சிறு மிருகங்கள் பிறாண்டும் தன்மையுடையவையாயிருந்து, பொதுவாக அவைகளோடு இடைப்படுகிற எல்லாவற்றையும் அழித்துவிடும்.

**திராட்சத்தோட்டங்களில் பூவும் பிஞ்சுமானவைகளை கவனமாய் பாதுகாத்தல் :-**

இந்த திராட்சத்தோட்டத்தை உதாரணமாகக் கொண்டு சாலமோன் ஞானி பேசுகையில், இந்த நரிகள் திராட்சை தோட்டங்கள்மேல் இயற்கையாக விசேஷவிருப்பம் கொண்டிருந்தபோதிலும், திராட்சை பரிசுத்தஆவியின் கனிகளைக் குறிக்கிறது. இந்த சிறுநரிகள் திராட்சச் செடிகளை தங்கள் கூர்மையான நகங்கள்கொண்டு பிறாண்டி, தங்கள் பற்களைக்கொண்டு அதன் வேர்கள்